சேலம் ஒருங்கிணைந்த மாவட்ட கழக செயலாளர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களின் துணைவியார் லீலாவதி ஆறுமுகம் உடல் நலிவுற்று சென்னையில் உள்ள தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில். இயற்கை எய்தினார். அம்மையாரது உடல் சேலம் ஏற்காடு அடிவாரத்தில் உள்ள கிழக்கு மாவட்ட தி.மு.க இளைஞரணி அமைப்பாளர். டாக்டர். பிரபு வீட்டில் வைக்கப்பட்டிருந்தது அவரது உடலுக்கு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு. சேலம் மத்திய மாவட்ட கழக செயலாளர். அமைச்சர். இரா. இராஜேந்திரன். கிழக்கு மாவட்ட செயலாளர். எஸ்.ஆர்.சிவலிங்கம். எம்.பி. மேற்கு மாவட்டச் செயலாளர். டி.எம். செல்வகணபதி. மேயர் ஆ.ராமச்சந்திரன், மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர். டாக்டர் ஆ க . தருண் கட்சி நிர்வாகிகள். மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். அவரது உடல் பூலாவரியில் உள்ள தோட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டது. உடல் அடக்கம் செய்து முடிக்கும் வரை சேலம் மத்திய மாவட்டச் செயலாளர். இரா. இராஜேந்திரன் உடன் இருந்தார்.

மேனாள் வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டி எஸ்.ஆறுமுகம் அவர்களின் துணைவியாரும்,சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர் வீரபாண்டி ஆ.பிரபு தாயாருமான திருமதி. லீலா ஆறுமுகம் அவர்கள் திடீர் உடல்நிலை பாதிக்கப்பட்டு சென்னை, முரசொலி அலுவலகம் அருகே உள்ள சூர்யா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, நேற்று முன்தினம் (31.08.2025) காலை இயற்கை எய்தினார் என்பதினை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். இச்செய்தியறிந்ததும் கழக இளைஞர் அணி செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று மறைந்த திருமதி லீலா ஆறுமுகம் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

கத்தாரில் சாலை விபத்து: உயிரிழந்த

திருவண்ணாமலை நவாஸ் குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் நிதி உதவி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப்.2-

கத்தாரில் சாலை விபத்தில் உயிரிழந்த திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த நவாஸ் குடும்பத்திற்கு ஐந்து லட்சம் ரூபாய் நிதி உதவியினை வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவு வருமாறு:-

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், பக்கிரிபாளையம் கிராமம், ரஹமான்பேட்டையைச் சேர்ந்த நவாஸ் (வயது 35) என்பவர் கத்தார் நாட்டில் கடந்த 10 ஆண்டுகளாக கார் ஓட்டுநராக பணிபுரிந்துவந்த நிலையில், கடந்த 25.8.2025 அன்று நிகழ்ந்த சாலை விபத்து ஒன்றில் உயிரிழந்தார் என்ற செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

கத்தார் நாட்டில் சாலை விபத்தில் உயிரிழந்த நவாஸ் அவர்களின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதல்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த நவாஸ் அவர்களின் குடும்பத்தினருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ஐந்து இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது உத்தரவில் கூறியுள்ளார்.

செப். 4, 5 - ல் நடைபெறுகிறது! சுயமரியாதை இயக்கத்தை உலகமயமாக்கும் நோக்குடன்

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் 2 நாள் மாநாடு! முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றுகிறார்!

'இந்து' நாளிதழுக்கு கழக செய்தித் தொடர்பாளர் வழக்கறிஞர் மனுராஜ் சண்முகசுந்தரம் பேட்டி

சென்னை, செப். 2-

'தி இந்து' ஆங்கில நாளேட்டுக்கு தி.மு.க.வின் செய்தித் தொடர்பாளர் வழக்கறிஞர் மனுராஜ் சண்முகசுந்தரம் அளித்த பேட்டி வருமாறு:-

"தமிழ்நாட்டில் வேரூன்றியிருந்த ஜாதிய, பாலின ஏற்றத் தாழ்வுகளை எதிர்கொண்டு, அதன் சமூகஅரசியல் நிலப்பரப்பை மாற்றியமைத்த சுயமரியாதை இயக்கத்தை உலகமயமாக்கும் நோக்குடன் இங்கிலாந்தில் உள்ள செயின்ட் அந்தோணி கல்லூரியும், பெல்லியோல் கல்லூரியும் இணைந்து ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் செப்டம்பர் 4, 5 ஆகிய தேதிகளில் இரண்டு நாள் மாநாட்டை ஒருங்கிணைத்துள்ளன.

இந்த மாநாட்டில் பல்துறைகளைச் சேர்ந்த முன்னணி அறிஞர்களும், வல்லுநர்களும் பங்கேற்கின்றனர்.

அரசியல் மற்றும் தத்துவ நெறிமுறையாகத் தொடரும் 'சுயமரியாதை'க் கருத்தியலின் உலகளாவிய பொருத்தத்தை இம் மாநாடு ஆராயும்.

இது திராவிட அனுபவத்தை பன்னாட்டுக் குடிமை உரிமைப் போராட்டங்கள், நிறவெறிக்கு எதிரான போராட்டங்கள் முதல் இன்றைய அமைப்பு ரீதியான ஏற்றத் தாழ்வுகளுக்கு எதிரான சமகால அணிதிரட்டல் வரை ஒடுக்குமுறைக் கட்டமைப்புகளுக்கு அறைகூவல் விடுத்து அவற்றை தலைகீழாகப் புரட்டிப் போடும் இயக்கங்களுடன் ஒப்புநோக்கி உரையாடலை முன்வைக்கும்.

புத்தகங்கள்: முதல்வர் வெளியிடுகிறார்!

செப்டம்பர் 4 ஆம் நாள், சுயமரியாதை இயக்கத்தின் நூறு ஆண்டுப் பயணத்தையும் சமூகத்தை வடிவமைப்பதில் அதன் சமகால பொருத்தப்பாட்டையும் எடுத்துக் காட்டும் இரண்டு புத்தகங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிடுவார்.

செப்டம்பர் 5 ஆம் தேதி லண்டனில் இந்திய மாணவர்களுடனும், பட்டதாரிகளுடனும் முதலமைச்சர் உரையாடுவார் என்றும் வழக்கறிஞர் மனுராஜ் சண்முகசுந்தரம் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம் - அந்தியூரில் நலம் காக்கும் மருத்துவ முகாம்!

ஏ.ஜி.வெங்கடாசலம் எம்.எல்.ஏ., துவக்கி வைத்தார்!

ஈரோடு, செப்.2-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,ஈரோடு மாவட்டம் அந்தியூர் சட்டமன்றத் தொகுதி அந்தியூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமை அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடாசலம் துவக்கி வைத்து ஆய்வு மேற்கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தொடர்ந்து முகாமில் பேசிய சட்டமன்ற உறுப்பினர்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவுபடி சாமானிய மக்களும் தரமான மருத்துவ சேவைகளை பெற வேண்டும் என்பதற்காக மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48, வருமுன் காப்போம், இதயம் காப்போம், நடப்போம் நலம் பெறுவோம், மக்களைத் தேடி மருத்துவ ஆய்வகத் திட்டம், தொழிலாளர்களைத் தேடி மருத்துவத் திட்டம், சிறுநீரகம் பாதுகாக்கும் சீர்மிகு திட்டம், புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள் போன்ற பல்வேறு சுகாதார திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்த வரிசையில் தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தி உள்ள மற்றொரு மருத்துவ சேவை சார்ந்த திட்டம் தான் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம். இந்த திட்டத்தின் மூலமாக பொதுமக்களுக்கு தேவையான மருத்துவ சேவைகள், பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகிறது.

'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்ட மருத்துவ முகாமில் அனைத்து பரிசோதனைகளும் இலவசமாக செய்யப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், நோய் கண்டறியப்பட்டால், அதற்கான சிகிச்சைகளும் மருந்துகளும் இலவசமாகவே வழங்கப்படுகின்றன.

இதனால், கட்டணம் செலுத்தி மருத்துவம் பார்க்க வசதி இல்லாத ஏழை, எளிய மக்கள் பெரியளவில் பயனடைவார்கள். போக்குவரத்து வசதி அதிகம் இல்லாத இடங்களிலும் முகாம்கள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு முகாமின் போது பொதுமக்கள் எளிதாக புரிந்துக் கொள்ளும் வகையில் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

மேலும், வயது, பாலினத்தை பொருட்படுத்தாமல் அந்தியூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள ரத்த அழுத்தம், சர்க்கரை நோயாளிகள், இதய நோய்கள், மனநலன் பாதிப்பு உள்ளவர்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், ஊட்டச்சத்து குறைபாடு உள்ளவர்கள், மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட அனைவருமே இந்த முகாம்களை பயன்படுத்தி பலனைப் பெறலாம்.

மருத்துவம், பல் மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், மனநல மருத்துவம், நுரையீரல் மருத்துவம், சிறுநீரக மருத்துவம் உள்ளிட்ட மருத்துவ சேவைகளும் மற்றும் இந்திய மருத்துவம் சார்ந்த ஆலோசனைகளும் சிறப்பு மருத்துவ நிபுணர்களால் வழங்கப்படுகின்றனர்.

மேலும், பொது மருத்துவ நிபுணரின் அறிவுறுத்தலின் படி, எக்ஸ்ரே, எக்கோ கார்டியோகிராம், அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், இரத்த அணுக்களின் எண்ணிக்கை, இரத்த சர்க்கரை, சிறுநீரக செயல்பாட்டு பரிசோதனைகளும் செய்யப்படுகின்றன.

நிகழ்வில் ஈரோடு மாவட்ட சுகாதார அலுவலர் அருணா,

அந்தியூர் பேரூராட்சி மன்ற தலைவர் எம்.பாண்டியம்மாள், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் பழனிச்சாமி,

வட்டார மருத்துவ அலுவலர் சக்தி கிருஷ்ணன்,

மின்சார வாரிய அந்தியூர் உப கோட்ட உதவி செயற் பொறியாளர் அங்கப்பன்,

போக்குவரத்து காவல் துறை ஆய்வாளர் கஸ்தூரி, உதவி ஆய்வாளர் த மெய்யழகன் உள்ளிட்ட பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமை தான் தமிழ்நாட்டை உயர்த்தும் என்று உணர்ந்து, கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ., முன்னிலையில், தே.மு.தி.க. மாவட்ட அவைத்தலைவர் முருகன் சுப்பையா, வடக்கு பகுதி செயலாளர் ஆனந்த், மாவட்ட துணைச் செயலாளர் பெரியண்ணன், மாவட்ட இளைஞரணி செயலாளர் துளசி மணி, பொதுக்குழு உறுப்பினர் ஹரிஹரன், மாவட்ட தொழிற்சங்க துணைத் தலைவர் பழனிச்சாமி, மாவட்ட விவசாய அணி செயலாளர் அருண், மாவட்ட மாணவரணி செயலாளர் மனோஜ் ராஜ், மாவட்ட மகளிர் அணி செயலாளர் சுமதி, நகர மகளிர் அணி செயலாளர் தீபிகா, துணைச் செயலாளர்கள் சந்தியா, கற்பகம், உள்ளிட்ட 21 பேர், தே.மு.தி.க.வில் இருந்து விலகி கழகத்தில் இணைந்தனர். தாந்தோணி கிழக்கு ஒன்றியம், ஆண்டாங்கோவில் மேல்பாகம் ஊராட்சி குடித்தெரு மற்றும் காவல்காரத்தெரு பகுதியை சேர்ந்த அ.தி.மு.க. பா.ஜ.க. மற்றும் புதிய வாக்காளர்கள் என 34 பேர் தங்களை கழகத்தில் இணைத்து கொண்டனர்.

வலைதளங்களில் வலம் வரும் செய்தி!



முன்னாள் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் துணைவியார்

திருமதி லீலா ஆறுமுகம் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப்.2-

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

முன்னாள் அமைச்சர் சேலத்துச் சிங்கம் வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்களின் துணைவியாரும், சேலம் கிழக்கு மாவட்டக் கழக இளைஞர் அணி அமைப்பாளர் வீரபாண்டி ஆ.பிரபு அவர்களின் தாயாருமான திருமதி லீலா ஆறுமுகம் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமுற்றேன்.

தகவலறிந்ததும், அன்னையை இழந்து தவிக்கும் தம்பி ஆ.பிரபு அவர்களைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு எனது ஆறுதலைத் தெரிவித்தேன்.

திருமதி. லீலா அம்மையாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்கள்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் துணைவியார்

திருமதி லீலா ஆறுமுகம் மறைவு!

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் அஞ்சலி!

சென்னை, செப்.2-

மேனாள் வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டி எஸ்.ஆறுமுகம் அவர்களின் துணைவியாரும், சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர் வீரபாண்டி ஆ.பிரபு தாயாருமான திருமதி. லீலா ஆறுமுகம் அவர்கள் திடீர் உடல்நிலை பாதிக்கப்பட்டு சென்னை, முரசொலி அலுவலகம் அருகே உள்ள சூர்யா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, நேற்று முன்தினம் (31.08.2025) காலை இயற்கை எய்தினார் என்பதினை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று மறைந்த திருமதி லீலா ஆறுமுகம் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

மேலும் கழக முன்னணியினர், கழகத் தோழர்கள் மறைந்த லீலா ஆறுமுகம் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (01.09. 2025) பிற்பகல் 12 மணியளவில் கள்ளக்குறிச்சி மெயின் ரோட்டில் உள்ள ஏ.வி.ஆர். கிருஷ்ணா விலாவிலிருந்து புறப்பட்டு பூலாவரியில் உள்ள இடுகாட்டில் இறுதி சடங்கு நடைபெற்றது.

ஈரோடு மத்திய மாவட்டம் கழக அலுவலகத்தில் பவானி சட்டமன்றத் தொகுதி, அம்மாப்பேட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட பட்லூர் ஊராட்சியில் இருந்து அ.தி.மு.க. மற்றும் மாற்றுக் கட்சிகளை சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் ஈரோடு மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், முன்னாள் அமைச்சருமான தோப்பு என்.டி.வெங்கடாச்சலம் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். நிகழ்வில் அம்மாபேட்டை மத்திய ஒன்றிய கழக செயலாளர் அசோக்குமார், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் பி.எஸ். கணேசன், கிளைச் செயலாளர்கள் திருமூர்த்தி, முத்துச்சாமி, வெங்கடுசாமி, சின்ன குழந்தை, தமிச்செல்வன், பூத் ஒருங்கிணைப்பாளர்கள் பி.என்.ராமசாமி, ஸ்ரீதர், பூத் நிர்வாகிகள் ஆனந்தன், நவீன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.